மாலை
எக்ஸ்பிரஸ்
MAALAI EXPRESS
மாலை நாளிதழ்
மாநிலம் பயனுற!

# கூட்டு மருத்துவமும், ஒரே ஆரோக்கியமும்: ஜிப்மரில் 5 நாள் பயிற்சி முகாம்



**புதுச்சேரி, டிச. 15-**

புதுச்சேரி ஜிப்மரில் 'கூட்டு மருத்துவமும், ஒரே ஆரோக்கியமும்' என்ற தலைப்பில் மனித ஆரோக்கியம், கால்நடை மருத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் துறைகளைச் சேர்ந்த பல்வேறு நிபுணர்கள் 5 நாள் தீவிர பயிற்சி முகாமை நடத்தினர். ஜிப்மர் நோய் தடுப்பு சமூக மருத்துவத்துறை மற்றும் ஜெர்மனியை சேர்ந்த ஹைடெல்பர்க் சர்வதேச சுகாதார நிறுவனம் ஆகியவை இணைந்து நடந்த பயிற்சி முகாமில் கலந்துரையாடல்கள், குழு விவாதங்கள் மற்றும் கள பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இதில், புதுச்சேரி அரசின் கால்நடை பராமரிப்புத் துறையைச் சேர்ந்த டாக்டர் லதா மங்கேஷ்கர், டாக்டர் மரியா ஆகியோரும், ராஜீவ் காந்தி கால்நடை மருத்துவ, ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் பானுரேகா, தேசிய காலநிலை மாற்றம் மற்றும் மனித ஆரோக்கிய திட்டத்தின் மாநில முதன்மை அதிகாரி டாக்டர் மணிமொழி, தேசிய வாய்வழி சுகாதார திட்டத்தின் மாநில முதன்மை அதிகாரி டாக்டர் கவிப்பிரியா உத்தமன், ஜிப்மர் சர்வதேச பொது சுகாதார மையத்தின் தொற்றும் நோய்கள் மற்றும் கண்காணிப்பு பிரிவின் மருத்துவர் டாக்டர் யாமினி ஆகியோர் பங்கு பெற்றனர்.

இந்த அமர்வு ஜிப்மர் நோய் தடுப்பு மற்றும் சமூக மருத்துவத்துறை பேராசிரியர்கள் டாக்டர் பிரேமராஜன், டாக்டர் சின்தான்சு சேகர், டாக்டர் ஜெயலட்சுமி மற்றும் ஜெர்மன் நிறுவனத்தின் பார்த்தசாரதி ஆகியோரால் ஒருங்கிணைந்து நடத்தப்பட்டது.

இந்த பயிற்சி பட்டறை ஜிப்மர் கல்லூரி முதல்வர் டாக்டர் விக்ரம் காடே, ஜெர்மனியை சேர்ந்த ஹைடல்பர்க் சர்வதேச சுகாதார நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் உலப் ஹார்ஸ்டிக் ஆகியோரால் துவக்கி வைக்கப்பட்டு ஜிப்மர் நோய் தடுப்பு மற்றும் சமூக மருத்துவத்துறை பேராசிரியர் டாக்டர் பிரேமராஜன் மற்றும் ஜெர்மனியைச் சேர்ந்த ஹைடல்பர்க் சர்வதேச சுகாதார நிறுவனத்தின் பொது சுகாதார வல்லுநர் டாக்டர் அரில்லாசோரஸ் ஆகியோரால் ஒருங்கிணைந்து 5 நாட்களாக நடைபெற்றது.